# அமெரிக்கா; புதிய அதிபர், பழைய பிரச்னைகள்



**முனைவர் டி.கே. ஜயராமன்,**
முன்னாள் பொருளாதார நிபுணர்,
ஆசிய வளர்ச்சி வங்கி, மணிலா.
இப்போது மலேசியாவின் உடார்,
துங்கு அப்துல் ரஹ்மான் பல்கலைக்கழகம்,
வருகை பேராசிரியராக உள்ளார்.
இணையதளம்: www.tkjayaraman.com

சமீபத்தில் நடந்த அமெரிக்க அதிபர் தேர்தல் முடிவுகளை, அமெரிக்கர்கள் மட்டுமின்றி இந்தியா உள்ளிட்ட உலக நாடுகளும் எதிர்பார்த்தன. அதிபர் தேர்தலில் குடியரசு கட்சி வேட்பாளராக டொனால்ட் டிரம்ப், ஜனநாயக கட்சி வேட்பாளராக கமலா ஹாரிஸ் களமிறங்கினர். தனது இரண்டாவது முயற்சியில் (2021ல்) வெற்றி வாய்ப்பை இழந்த டிரம்ப், இந்த முறை வெற்றி பெற்றுள்ளார். வரும் 2025 ஜனவரி 20ம் தேதி அவர் அதிபராக பதவியேற்பார்.

டிரம்ப்பின் இந்த இரண்டாவது நிர்வாகத்தில் இந்தியா – அமெரிக்கா இடையிலான உறவு எப்படி இருக்கும் என்பதை இந்தக் கட்டுரை ஆராய்கிறது.

அமெரிக்காவின் பாதுகாப்பு பங்காளி : இந்தியா – அமெரிக்கா இரண்டுமே ஜனநாயக ஆட்சி நடத்துகின்றன. குறிப்பிட்ட கால இடைவெளியில் தேர்தல் நடத்துகின்றன. கம்யூனிச நாடான சீனா, ஒரு கட்சி ஆட்சியின் கீழ் செயல்படுகிறது.

உலகில் 2வது இடத்தில் உள்ள சீனாவின் செல்வாக்கு, மற்ற பகுதிகளில் வளர்ந்து வருகிறது. அதை எதிர்கொள்ளும் விதமாக, தனது முக்கியமான பொருளாதார மற்றும் பாதுகாப்பு பங்குதாரராக இந்தியாவை, அமெரிக்கா கருதுகிறது.

சமீப காலமாக, முக்கிய தொழில்நுட்பத் துறைகளில் இரண்டு நாடுகளும் ஒத்துழைப்பை ஆழப்படுத்தியுள்ளன. டிரம்ப்பின் முதல் நிர்வாகத்தில்தான் இந்தியாவிற்கு வர்த்தக அங்கீகாரம் வழங்கப்பட்டது. பைடன் நிர்வாகத்தின் கீழ், வளர்ந்து வரும் தொழில்நுட்பங்கள் தொடர்பான வர்த்தக உரையாடல்கள் தொடங்கப்பட்டன. செயற்கை நுண்ணறிவு, உயிரி தொழில்நுட்பம் மற்றும் சுத்தமான ஆற்றல் ஆகிய துறைகளில் ஒத்துழைப்பை அதிகரிக்க இந்தியாவும் அமெரிக்காவும் முடிவு செய்துள்ளன.

செமி கண்டக்டர்கள், விண்வெளி, தொலைத்தொடர்பு, செயற்கை நுண்ணறிவியல், பாதுகாப்பு போன்ற முக்கியமான களங்களில் தொழில்நுட்பங்களின் வளர்ச்சி மற்றும் வர்த்தகத்தை எளிதாக்குவதற்கான கூட்டாண்மை தொடர்ந்து பலப்படுத்தப்படுகிறது. அமெரிக்க தலைமையின் மாற்றம் எதுவாக இருந்தாலும் இந்த ஒத்துழைப்பு நீடிக்கும்.

கவலை தரும் பிரச்னைகள் : வர்த்தகம் மற்றும் குடியேற்றம் ஆகிய இரண்டும் அமெரிக்காவின் எதிர்காலத்தை பாதிக்கும் பொதுவான பிரச்னைகள். டிரம்ப்பின் முதல் பதவிக்காலத்தில், சீனா மற்றும் இந்தியா உள்ளிட்ட நாடுகளுடன், அமெரிக்கா கடுமையான மோதல்களை எதிர்கொண்டது. தடையற்ற வர்த்தகம் காரணமாக அமெரிக்காவில் வேலைகள் குறைந்தன. சீனாவிலிருந்து மலிவான மற்றும் தரம்குறைந்த பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டதால் நுகர் பொருட்களின் உள்நாட்டு உற்பத்தி குறைந்தது. இத்தகைய வரம்பற்ற உலகமயமாக்கலை டிரம்ப் கண்டித்தார். உள்நாட்டு வேலைகளை பாதுகாக்க விரும்பினார். சீன பொருட்களுக்கு 60 சதவீத வரியும், இந்தியா உட்பட மற்ற நாடுகளின் பொருட்களுக்கு 10 சதவீத வரியும் விதிக்கப் போவதாக அறிவித்தார்.

சீனாவில் இருந்து இறக்குமதியை குறைக்கவும், சீன இறக்குமதிகளுக்கு 60 சதவீத வரி விதிப்பதன் மூலம், அந்நாட்டுடனான அமெரிக்க வர்த்தக போரை தொடரவும் டிரம்ப் விரும்புகிறார். டிரம்ப் தனது தேர்தல் பிரச்சாரத்திலும், துப்பாக்கிச் சண்டையை விட வர்த்தகப் போரை தான் விரும்புவதாகவும், அதன் மூலம் சீனாவை மண்டியிட வைப்பேன் என்றும் தெளிவுபடுத்தினார். இதற்கு சீனா பதிலடி கொடுத்தாலும், இறுதியில் அடிபணியத்தான் வேண்டும்.

ஜனநாயக மற்றும் குடியரசு கட்சிகள், இரண்டும் குடியேற்றத்தை கட்டுப்படுத்த விரும்புகின்றன. அதுவும் டிரம்ப், உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்வார். நாடு அகதிகளை கடத்துவதையும், பிறப்பு அடிப்படையிலான குடியுரிமைக்கு முற்றுப்புள்ளி வைப்பதையும் டிரம்ப் ஆதரிக்கிறார்.

'மெக்சிகோவில் தங்கியிருங்கள்' என்ற திட்டத்திற்கு திரும்புவதன் மூலம் அமெரிக்காவுக்குள் சட்டவிரோத குடியேற்றங்களை பெருமளவில் கட்டுப்படுத்த பார்க்கிறார். மேலும், விசா கட்டுப்பாடுகள் மற்றும் தகுதி அடிப்படையிலான குடியேற்றம் ஆகியவற்றை செயல்படுத்த டிரம்ப் நடவடிக்கை எடுப்பார். இந்தக் கட்டுப்பாடுகளால், அமெரிக்க மக்கள்தொகையில் 20 சதவீதமாக இருக்கும் இந்தியர்களுக்கு சிக்கல் ஏற்படும்.